DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 48/2018

Deposition of Witness : PW. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காந்தி | த/பெ. | : | சுப்பிரமணியன் |
| கிராமம் | : | காசிபாளையம் | தாலுகா | : | ஈரோடு |
| தொழில் | : | ரியல்எஸ்டேட் | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 17-02-2026.

முதல் விசாரணை ( சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

நீதிமன்றத்தில் இருந்து வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று எனக்கு அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்பின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள வாதிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கில் உள்ள வாதிகள் பாலசுப்பிரமணியன் மற்றும் மீராபாய் ஆகியோர்கள் எனது வீட்டிற்கு பக்கத்தில் இடம் வாங்கினார்கள். எனது வீட்டில் இருந்து 50 அடி தூரத்தில் அந்த இடம் உள்ளது. வாதிகள் காலி இடமாக வாங்கி அதில் காபௌண்ட் சுவர் மற்றும் கேட் போட்டு காலியிடமாக வைத்து வருகிறார்கள். நான் 2008ம் வருடத்தில் இருந்து வாதிகளின் இடத்திற்கு பக்கத்தில் வீடு கட்டி நான் குடியிருந்து வருகிறேன். நான் வீடு கட்டி குடியிருக்கும் எனது இடமானது எனக்கு முன்பு எனது தங்கை பாப்பாத்திக்கு பாத்தியப்பட்டது. அந்த இடத்தை காலியிடமாக எனது தங்கை பாப்பாத்தி எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். அஜிமாபீபி என்பவரின் பொது அதிகார முகவர் ராமகிருஷ்ணன் என்பவரிடமிருந்து நான் வீடு கட்டியுள்ள இடத்தை எனது தங்கை பாப்பாத்தி கிரையம் பெற்றார். எனது தங்கை அந்த சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு நானும், அவருடன் சேர்ந்து சொத்து குறித்து விசாரித்தேன். பொது அதிகார முகவர் ராமகிருஷ்ணன் மூலம் அஜிமாபீபி வீட்டிற்கு நாங்கள் சென்றோம். கடை வைத்திருந்த பொழுது அஜிமாபீபியின் மூத்த மகன் முகமதுரபிக் என்பவரை எனக்கு தெரியும். அஜிமாபீபி, முகமதுரபிக் மற்றும் அஜிமாபீபியின் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரிடம் நாங்கள் சொத்து குறித்து விசாரித்தோம். அந்த சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் முகமதுரபி தனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.17 19:14:13 +0530

என்று சொன்னார். முகமதுரபியின் தகப்பனார் இறந்தபிறகு அந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் முகமதுரபியின் தகப்பனாரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டு இருந்தது. அவ்வாறு பாத்தியப்பட்டு இருந்த சொத்தை என்ன செய்தார்கள் என்றால் 1992ல் அவர்களது அம்மாவிற்கு அவர்கள் எழுதிக்கொடுத்துவிட்டார்கள். இதை யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் அஜிமாபீபியும், முகமதுரபியும் சொன்னார்கள். எனது சகோதரி பாப்பாத்தி பெயரில் கிரையம் ஏற்பட்ட போது நான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். பத்திர பதிவாளர் அலுவலகத்திற்கு யார்யார் சென்றோம் என்றால் நான், பாப்பாத்தி, அஜிமாபீபியின் பொது அதிகார முகவர் ராமகிருஷ்ணன், அஜிமாபீபி, முகமதுரபி ஆகியோர்கள் சென்றோம். பாப்பாத்தியின் கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். முகமதுரபியை சாட்சி கையெழுத்து போடுமாறு கேட்டோம், விடுதலை கொடுத்துவிட்டதால் சாட்சி கையெழுத்து போடக்கூடாது என்று அவர் சொல்லிவிட்டார். பாப்பாத்தி கிரையம் வாங்குவதற்கு முன்பு அஜிமாபீபியிடம் சொத்தை கிரையம் வாங்கியவர்கள் குறித்து நான் கேட்டேன். டாக்டர் கணேசன் மற்றும் 4 நபர்களுக்கு 1994ம் வருடம் சொத்தை கிரையம் கொடுத்ததாக அஜிமாபீபி சொன்னார். டாக்டர் கணேசன் வகையறாவிடம் யார் சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் பாலசுப்பிரமணியன், பழனிசாமி, மீராபாய், கனகவள்ளி ஆகியோர்கள் சொத்தை கிரையம் வாங்கினார்கள். எனது சகோதரி சொத்தை எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்கவேண்டிய அவசியம் என்னவென்றால் எனது சகோதரியின் மகன்கள் சிங்கப்பூரில் இருந்ததால் எனது சகோதரி சிங்கப்பூருக்கு செல்ல முடிவு செய்ததால் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். 1ம் பிரதிவாதி அப்துல்கனியை எனக்கு தெரியும். 2018ம் வருடம் 1ம் பிரதிவாதி அப்துல்கனி எனது வீட்டிற்கு வந்து இது எனது இடம், வீட்டை காலி பன்னவேண்டும் அல்லது பணம் ரூ.10,00,000/-ம் கொடு என்று சொன்னார். உங்கள் இடம் என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று நான் அப்துல்கனியிடம் கேட்டேன். ஆதாரம் உள்ளது என்று சொல்லிவிட்டு அப்துல்கனி சென்றுவிட்டார். அதன்பிறகு நான் காவல்துறையில் புகார் கொடுக்க சென்றேன். இது சிவில் வழக்கு நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று காவல் நிலையத்தில் சொல்லிவிட்டார்கள். நான் 2019ம்

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.02.17 19:14:21 +0530

வருடம் ஈரோடு, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். அப்துல்கனி பிரச்சனை செய்த பிறகு எனது சகோதரி பாப்பாத்திக்கு சொத்தை எழுதிக்கொடுத்த அஜிமாபீபியை நான் சந்தித்தேன். முகமதுரபி இப்படியே தான் செய்து கொண்டிருக்கிறார், சொத்தை அவன் எழுதிக்கொடுத்துவிட்டு இப்படி பன்னுகிறான், அதனால் நீங்கள் கேஸ் போட்டுக்கொள்ளுங்கள் என்று அஜிமாபீபி சொல்லிவிட்டார். 18-02-2019ம் தேதியில் திருச்சி பதிப்பக தினகரன் நாளிதழில் தான் பொது அறிவிப்பு கொடுத்திருப்பதாக அஜிமாபீபி சொன்னார். அது சம்பந்தமாக நாளிதழை அஜிமாபீபி என்னிடம் காட்டினாரா என்றால் காட்டினார். அந்த நாளிதழ் நகலை அஜிமாபீபி என்னிடம் கொடுத்தார். அஜிமாபீபியின் மூத்த மகன் முகமதுரபியை சந்தித்து கேட்கலாம் என்று சென்றபோது அவரை எந்த இடத்திலும் கண்டுபிடிக்க முடியவில்லை, அவர் தலைமறைவாகிவிட்டார். தங்களுக்கு பாத்தியப்பட்ட ஈரோடு, திருப்பூர், திருச்சி மற்றும் சேலம் உள்ள சொத்துக்களை பொறுத்து இதே போல் முகமதுரபி பிரச்சனை செய்துவருவதாக என்னிடம் அஜிமாபீபி சொன்னார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் வாதி பாலசுப்பிரமணியம் எனது உறவினர் இல்லை. 1992 வருடத்திய விடுதலை பத்திரத்தை நான் பார்த்துள்ளேன், அந்த பத்திரத்தின் நகல் எனது கைவசம் உள்ளது. 1992 வருடத்திய விடுதலை பத்திரத்தில் சொத்து விபரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். கிரையம், தானசெட்டில்மெண்ட் போன்ற பத்திரங்களுக்கு சொத்து விபரம் போட்டால் தான் அந்த பத்திரம் செல்லும் என்றால் அதுமாதிரியான பத்திரத்திற்கு சொத்து விபரம் போட்டால் தான் செல்லும். எல்லா பத்திரங்களுக்கும் சொத்து விபரம் போட்டால் தான் செல்லும் என்றால் அவ்வாறு இல்லை. செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து ஈரோடு, திருச்சி, திருப்பூர், சேலம் ஆகிய ஊர்களில் சொத்துக்கள் நிறைய இருப்பதால் சொத்து விபரம் வராது. 1992 வருடத்திய விடுதலை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து தான் எனது சகோதரி பாப்பாத்தி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அஜிமாபீபி உயிருடன் இருந்து வருகிறாரா என்று எனக்கு தெரியாது. அஜிமாபீபியின் வாரிசுகள் மொத்தம் 2 பெண்கள் மற்றும் 8 ஆண் நபர்கள் உள்ளார்கள், அவர்களது பெயர் விபரங்கள் எனக்கு தெரியாது.

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.02.17 19:14:30 +0530

அப்துல்கனி பெயரில் எந்த தேதியில் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேன் என்றால் தேதி தெரியவில்லை. நான் சொல்லியது போல் அப்துல்கனி எனது வீட்டிற்கு வந்து எதுவும் கேட்கவில்லை என்றால் தவறு. அப்துல்கனி என்னை எந்தகாலத்திலும் பணம் கேட்டோ, இடத்தை கேட்டோ மிரட்டவில்லை என்றால் தவறு. தாவா சொத்து உண்மையில் அப்துல்கனிக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் தவறு. ராமகிருஷ்ணனை வைத்து வாதிகள் மற்றும் நாங்கள் மோசடியாக தாவா சொத்தை பொறுத்து கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் தவறு. வாதிகள் பெயரில் உள்ள கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

8 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.17 19:14:51 +0530

II Addl. District Judge, Erode.